கின்றது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே மாநில அரசும் சரி மத்திய அரசும் சரி இதிலே கருத்து வேறுபாடு கிடையாது. நிச்சயமாக இந்த புறவழிச் சாலையை அமைக்க வேண்டுமென்று இரண்டு அரசுகளுக்கும் நோக்கம் இருக்கிறது. நாங்கள் ஏற்கெனவே பேச்சுவார்த்தையிலே தெளிவுபடுத்தி இருக்கிறோம். ஆகவே நிச்சயமாக அந்தப் பணி இந்த ஆண்டு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. நிச்சயமாக உறுப்பினர் நம்பலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண் 189, திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

189—

குளித்தலையில் பேருந்து நிலையம் கட்டுதல்

*330—திரு. அ. பாப்பா சுந்தரம் :
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை பேரூராட்சிக்குச் சொந்தமாக பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குளித்தலை பேரூராட்சிக்குச் சொந்தமாக பேருந்து நிலையக் கட்டிடம் கட்டும் திட்டம் மாவட்ட அளவில் உள்ளது.

(ஆ) அரசு அளவில் பரிசீலிக்கும் கட்டத்தை அடையவில்லை.

திரு. அ. பாப்பா சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை என்பது நகராட்சியாகவும் இருக்கிறது. அந்த நகரத்திற்கு இதுவரையிலும் எந்தவித பேருந்து நிலையமும் இல்லை. ஆகவே, அந்த நகருக்கு பேருந்து நிலையம் கட்டுகின்ற முறையிலே முந்தைய தி.மு.க. ஆட்சியிலே நிலங்களை கையகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அப்போது நிலங்களைக் கையகப்படுத்த முடியாமல் போய்விட்டது. எனவே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலாவது ஏதாவது ஒரு இடத்தை கையகப்படுத்த அரசு முயற்சித்து இருக்கிறதா? இடத்தை கையகப்படுத்தியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 12]

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடத்தை கையகப்படுத்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. விரைவில் இந்த பேருந்து நிலையம் கட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 190. திரு. வெ. பழனிசாமி. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

190—

அங்கீகாரம் பெறாத மனைப்பிரிவுகளில் கட்டப்பட்ட வீட்டுப்பகுதிகளுக்கு வசதி.

*3923—திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிப் பகுதியில் அரசு அங்கீகாரம் இல்லாத மனைப்பிரிவுகளில் கட்டப்பட்ட வீடுகளுக்கு நகராட்சி மன்றம் எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் செய்துதர இயலாத தால் இப்பகுதிகளை அரசு அங்கீகரிக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அங்கீகரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு அங்கீகரிக்க வழிகள் ஏதும் இல்லை என்றாலும் மனைப்பிரிவுகளை முறைப்படுத்த சாலைகள் அமைத்து பொது இடங்களையும், சாலையையும் தானமாக நகராட்சிக்கு அளித்தால், நகர் ஊரமைப்புத்துறை இயக்குநரின் ஒப்புதல் பெற்று அடிப்படை வசதிகள் மற்றும் மனைப்பிரிவு ஒப்புதல் ஆகியவை செய்து தருவது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 10, 15 ஆண்டுக் காலமாக அங்கீகரிக்கப்படாத மனைப் பகுதிகளில் தெரு விளக்கு வசதி, சாலை வசதி, பாதை வசதி, சாக்கடை வசதி போன்றவற்றை செய்து கொடுக்க முடியாமல் முழுமையாக அனைத்து வரிகளையும் பொதுமக்கள் கட்டி வருகிறார்கள். அங்கீகரிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக மிகப் பெரிய தண்டனையாக இவ்வளவு வசதிகளையும் செய்து கொடுக்காமல் இருப்பதை அரசு மறுபரிசீலனை செய்து அனைத்துப் பகுதிகளையும் அங்கீகரிக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.